සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | மனைப் பொருளியல் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I | කාලය / காலம் / Time | 1 மணி |
|---|---|---|---|---|---|---|---|

01. குருதி உறைதலுக்கு அவசியமான போசணை
    1. உயிர்சத்து A 2. உயிர்சத்து B
    3. உயிர்சத்து D 4. உயிர்சத்து K

02. வல்லாரைச சம்பல் தயாரிச்டும்யாலு இறுதியில் எலுமிச்சை சாறு சேர்ப்பதன் மூலம் அகத்துறிஞ்சப்படும் கனியுப்பு
    1. பொட்டாசியம் 2. இரும்பு
    3. அயடீன் 4. சோடியம்

03. கல்சியத்தினதும் உயிர்ச்சத்து D யினதும் பிரதான தொழிற்பாடு
    1. குருதி உற்பத்தி
    2. கண்களின் சிறந்த தொழிற்பாடு
    3. எலும்புகளினதும் பற்களினதும் வளர்ச்சி
    4. நரம்புகளின் தொழிற்பாடு

04. பின்வருவனவற்றில் இனிப்புச்சுவை அதிக அளவில் காணப்படும் காபோவைதரேற்று
    1. சுக்ரோசு 2. குளுக்கோசு
    3. மோல்ட்டோசு 4. பிரக்டோசு

05. இறைச்சியிலும் மீனிலும் அடங்கியுள்ள புரதமானது
    1. இலக்கியுமின் 2.கொலாஜன் 3. அல்பியுமின் 4.செயின்

06. காபோவைதரேற்றுச சமிபாட்டிற்கு உதவும் நொதியம் ஆவது
    1. இலிப்பேசு 2 அமிலேசு
    3. பெப்சின் 4. பெப்திடே

07. நார்ப்பொருள் அடங்கிய உணவுகளை தினமும் உணவில் சேர்ப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படும் நோய்
    1. இதயநோய் 2.கொவிட் - 19
    3. நீரிழிவு 4. உயர் குருதி அமுக்கம்

08. குழையல் மாவைத் தயாரிக்கும் போது குளூட்டன் மூலம் ஏற்படும் மீள்சக்தித் தன்மையை மேலும் அதிகரிப்பதற்காக சேர்க்கப்படும் பதார்த்தம்
    1. மாங்காய் ஜூஸ் 2.கற்றாழைச்சாறு
    3. புளிக்கரைசல் 4.எலுமிச்சம் சாறு

09. சமைக்கும் போது சிறிதளவு திரவத்தைப் பயன்படுத்தி மூடிய பாத்திரத்தில் நீண்ட நேரம் சமைக்கும் சமையல் முறையானது
    1. ஸ்ரு செய்தல்
    2. நீராவியில் சமைத்தல்
    3. ஆழமான எண்ணெயில் சமைத்தல்
    4. அமுக்கத்தில் சமைத்தல்

10. பலாக்காய் வற்றல் தயாரிப்பதற்கு முன்னர் சுடுநீரில் அமிழ்த்தி எடுப்பதன் நோக்கம்
    1. விரைவாக உலரச்செய்தல்
    2. சமிபாடு இலகுவாதல்
    3. சுவையை அதிகரித்தல்
    4. நொதியங்களைச் செயலிழக்கச் செய்தல்

11. கீழே தரப்பட்டவை x எனும் உணவின் போசணை தொடர்பான தகவல்கள் சிலவாகும்

- பழப்பானமும் தோசியும் தயாரிக்கலாம்
- இரும்புச்சத்தின் அளவை அதிகரிக்க உதவும்
- நோயெதிர்ப்புக்சக்தி அதிக அளவு கொண்ட பழமாகும்
- ஔடதம் ஆகப் பயன்படுத்தக்கூடியது

X எனும் உணவானது
    1. கொய்யா
    2. நெல்லி
    3. தோடை
    4. அன்னாசி

12. சமைக்கும் போது ஏற்படும் மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. கரமலாக்கம் நடைபெறும் சந்தர்ப்பம்
    1. உலர் வெப்பத்திற்கு உட்படுத்தி தூளாக மாற்றுதல்
    2. பாலை உபயோகித்து யோகட் தயாரித்தல்
    3. சீனியைப் பயன்படுத்தி பலகாரங்கள் தயாரித்தல்
    4. கோதுமை மாவைப் பயன்படுத்தி நொறுங்கு மாப்பசை தயாரித்தல்

13. 12 கிராம் வெண்ணெயை உள்ளெடுப்பதன் மூலம் கிடைக்கும் சக்தியின் அளவு
    1. 98 கிலோ கலோரி
    2. 100 கிலோ கலோரி
    3. 102 கிலோ கலோரி
    4. 108 கிலோ கலோரி

14. அனுமதிக்கப்பட்ட நாளாந்த போசணைத் தேவவை அட்டவணைக்கமைய கர்ப்பவதி தாயொருவருக்கு தேவையான கல்சியத்தின் அளவு மில்லிகிராமும் போலிக் அமிலத்தின் அளவு மைக்ரோகிராமும் முறையே
    1. 400, 300
    2. 750, 500
    3. 750, 600
    4. 600, 400

15. குவாசியக்கோர் நோய் நிலைமையின் நோய் அறிகுறி அல்லாதது
    1. வயிறு முன் தள்ளப்படல்
    2. நிறை குறைதலும் வளர்ச்சி குன்றுதலும்
    3. கை கால் முகம் வீங்குதல்
    4. வாந்தியும் வயிற்றுப் போக்கும்

16. தயாரிக்கப்பட்ட உணவுகளின் தரப்பண்பையும் சிறந்த தரத்தையும் உறுதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் தரச்சான்றிதழ் குறியீடு
    1. GMP
    2. SLC
    3. HACCP
    4. ISO

17. உணவு பரிமாறும்போது பிழையின்றி ஆயத்தப்படுத்துகையில் பீங்கானுக்கு
    1. வலப்பக்கமாக கண்ணாடிக் குவளையை வைப்பது சிறந்தது
    2. இடப்பக்கமாக கைகழுவும் குவளையை வைப்பது சிறந்தது
    3. இடப்பக்கமாக கண்ணாடிக் குவளையை வைப்பது சிறந்தது
    4. வலப்பக்கமாக கைதுடை துண்டை வைப்பது சிறந்தது

18. கட்டிளமைப் பருவத்தில் முதற்பாலியல்புகள் தொடர்பான மிகவும் சரியான கூற்றைத் தெரிவு செய்க
    1. சூலகம் விருத்தியடைதல் , உடல் நிறை அதிகரித்தல்
    2. விதை விருத்தியடைதல் , உடல் வடிவம் மாற்றமடைதல்
    3. சூலகம் விருத்தியடைதல் , உடல் வடிவம் வேறுபடுதல்
    4. விதைப்பை, விதை ஆகியவற்றின் விருத்தி

19. யௌவனப் பருவத்தின் வயதின் அடிப்படையில் "பின் கட்டிளமைப் பருவ" வயதெல்லையானது
    1. 17 தொடக்கம் 20 வயது வரை
    2. 17 தொடக்கம் 21 வயது வரை
    3. 17 தொடக்கம் 19 வயது வரை
    4. 17 தொடக்கம் 22 வயது வரை

20. பாலியல் மூலம் கடத்தப்படும் நோய் அல்லாதது
    1. ஹிமொபிலஸ் இன்புளுவென்ஸா
    2. க்ளமீடியா
    3. ட்ரைக்கொமொனயசீஸ்
    4. ஹேர்பீஸ் சிம்பிளெக்ஸ்

21. கர்ப்பிணிப் பருவத்தில் ஏற்படக்கூடிய சிறு கோளாறுகள்
    1. காலைக் குமட்டல், உண்டி விருப்பின்மை, கால் வீக்கம்
    2. வாந்தி, கால் வீக்கம், உண்டி விருப்பின்மை
    3. உண்டி விருப்மின்மை, மலச்சிக்கல், உயர் குருதி அமுக்கம்
    4. வாந்தி, மலச்சிக்கல், நீரிழிவு

22) கட்டிளமைப் பருவ விருத்தி பற்றி மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சில கீழே காணப்படுகின்றன.

A- அவதானிக்கும் திறன், தர்க்கம், புலக்காட்ச்சதி திறன் ஏற்படல்

B- ஆனந்தம் கொள்ளல், திருப்தி அடைதல், வெற்றிகொள்ளல், பின்னடைதல்

C- ஞாபகம், அவதானம், ஆய்வு செய்யும் திறன் காணப்படல்

D- பொறாமை, பயம், துக்கம், கோபம் காட்டுதல்

E- முடிவெடுக்கும் திறன், வெற்றி, முரண்படுதல், நேர்மை காணப்படல்

இவற்றுள் கட்டிளமைப் பருவ உளவிருத்திப் பண்புகளைக் கொண்ட தொகுதி
    1. A யும் B யும்
    2. C யும் D யும்
    3. A யும் C யும்
    4. C யும் B யும்

23) மேற்காட்டப்பட்ட கருத்துக்களில் மனவெழுச்சி விருத்திப் பண்புகளைக் கொண்ட தொகுதி
    1. A யும் E யும்
    2. C யும் D யும்
    3. B யும் D யும்
    4. D யும் E யும்

24) புதிதாகப் பிறந்த குழந்தை தொடர்பான சரியான தகவல்
    1. பிறப்பு நிறை 2kg-2.5kg, நீளம் 55cm, தலை சுற்றளவு 30cm
    2. பிறப்பு நிறை 2.5kg-3kg, நீளம் 50cm, தலை சுற்றளவு 30cm
    3. பிறப்பு நிறை 2kg-3.5kg, நீளம் 50cm, தலை சுற்றளவு 34cm
    4. பிறப்பு நிறை 3kg-3.5kg, நீளம் 55cm, தலை சுற்றளவு 34cm

25) குழந்தைப் பருவ விருத்தி ஏற்படும் சரியான முறையானது
   1. தலையிலிருந்து கால் வரை சுற்றளவில் இருந்து மத்திய பகுதிக்கும்
   2. மத்தியிலிருந்து சுற்றுளவிற்கும் தலையிலிருந்து கால் வரையும்
   3. தலையிலிருந்து கால் வரை முழங்காலிலிருந்து மத்திய பகுதி வரையம்
   4. மத்திய பகுதியிலிருந்து தலைவரை தலையிலிருந்து மத்திய பகுதி வரையம்

26) குழந்தை பற்றிய பல்வேறு திறன்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A- தாயை இனங்கண்டு சிரிக்கும்
   B- தனியே நடக்க முயற்சிக்கும்
   C- சிரித்து வெளிப்பாட்டைக் காட்டும்
   D- உதவியின்றி எழும்பும்

   இவற்றில் அசைவுத் திறன்களாவன,
   1. A யும் D யும்
   2. B யும் C யும்
   3. B யும் D யும்
   4. A யும் B யும்

27) பிரசவத்தின் போது தாயின் குருதியும் முளையத்தின் குருதியும் ஒரே வகையாக இல்லாத போது ஏற்படும் ஒருங்கொட்டுதலை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளும் குருதிப் பரிசோதனை
   1. RH பரிசோதனை
   2. குருதி வகையை அறியும் பரிசோதனை
   3. ஹீமோகுளோபின் மட்டத்தை அறியும் பரிசோதனை
   4. VDRL பரிசோதனை

28) புடவை உற்பத்திக்குப் பயன்படும் இயற்கையான தாவர நார் வகையானது
   1. பட்டு, சணல், வெள்ளி
   2. பருத்தி, இலினன், பட்டு
   3. பருத்தி, இலினன், ரெப்
   4. வொயில், சணல், கம்பளி

29) மாணவி ஒருவரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் சில வருமாறு, இவற்றுள் சரியானதை தெரிவு செய்க.
   1. அடிமட்டம், காபன், வர்ணக்கட்டி, தையலுக்கு அவசியமான கருவிகள்
   2. பெருநூலோடி முடிச்சிட்டு ஆரம்பிக்கும் தையலாகும்
   3. குவில்ற் தைக்கும் போது வெளிப்பக்கமிருந்து உள்நோக்கி சிறுநூலோட வேண்டும்
   4. விஸ்பத் தையலும் ஒடுக்க மடிப்பும் நுட்ப தையல் முறைகளாகும்.

30) கீழே தரப்பட்ட கூற்றுகளில் சரியானதைத் தெரிவுசெய்க.
   1. மாதிரியுருவை கபிலநிறக் கடதாசியின் அழுத்தமான மேற்பரப்பில் வரைதல் வேண்டும்.
   2. நேர்கோடுகளை வரைவதற்கு அளவுநாடாவைப் பயன்படுத்தலாம்.
   3. ஆடையைத் தைப்பதற்கு முன்பு துணியை செப்பனிடல் வேண்டும்.
   4. பிள்ளை ஆடையின் திறப்பின் வெளியே தெரியும் பக்கம் இடது பக்கமாகும்

31) கீழே காணப்படும் தையல்களுள் அலங்காரத்தையல் அல்லாதது

   (1) XXXXXXXXX
   (2) – – – – – – – – –
   (3) 
   (4) 

32) தைக்கா விளிம்பிற்கு சரிவுக் கோட்டுத் துண்டொன்றை அல்லது நேரான பட்டியைப் பிடித்து அதனை முழுமையாக மடித்துத் தைப்பது
   1. சுருக்குப்பட்டி இணைத்தல்
   2. பைண்டிங் செய்தல்
   3. பைப்பிங் செய்தல்
   4. விளிம்பு மடித்துத் தைத்தல்

33) குழந்தை ஆடைக்கான மாதிரியுருவை நிருமானிக்கத் தேவையான அளவு

1. 40 செ.மீ 30 செ.மீ
2. 50 செ.மீ 60 செ.மீ
3. 52 செ.மீ 52 செ.மீ
4. 52 செ.மீ 62 செ.மீ

34) குழந்தை ஆடையின் தோள்களுக்கு ஏற்ற பொருத்து,

1. எளிய பொருத்து
2. தட்டைப் பொருத்து
3. பிரான்சியப் பொருத்து
4. மேற்செறி பொருத்து

35) பிள்ளை ஆடையின் திறப்பை மூடுவதற்கு ஏற்ற முறை

1. தெறியும் தெறியோட்டையும்
2. வெல்கோ டேப் பிடித்தல்
3. அமுக்கக்தெறி பிடித்தல்
4. நாடா பிடித்தல்

36) கீழே தரப்பட்டுள்ளவை மானிடவியலாளர்களினால் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பெயர்களாகும்.

A இணைந்த குடும்பம், விரிந்த குடும்பம், தனிக்குடும்பம்

B பிரதான குடும்பம், ஒன்றிணைந்த குடும்பம், விஸ்த்தரிக்கப்பட்ட குடும்பம்

C பரந்த குடும்பம், இணைந்த குடும்பம், ஒன்றிணைந்த குடும்பம்

D தனிக்குடும்பம், அடிப்படைக் குடும்பம், உப குடும்பம்

மேற்காட்டப்பட்டவற்றுள் கருக்குடும்பத்தையும் கூட்டுக்குடும்பத்தையும் குறிக்கும் ஒரே தொகுதி கொண்ட பெயர்கள் முறையே

1. A யும் B யும்
2. B யும் C யும்
3. C யும் D யும்
4. D யும் C யும்

37) குடும்பத்திற்கு அவசியமான தேவைகளில் சமூகத் தேவையானது.

1. சுகாதாரம்
2. பாதுகாப்பு
3. உதவி செய்தல்
4. கல்வி

38) மனையின் உள்ளக அலங்காரத்திற்குப் பயன்படுத்தப்படும் துணையணிகள் அல்லாதன

1. சுவர் அலங்காரம், கம்பளம்
2. பூச்சாடி, மணிக்கட்டு
3. மேசைத்தட்டும், கைத்துடைப்பமும்
4. கைத் துடைப்பம், மேசை விரிப்பு

39) மனை வளங்கள் பற்றி மாணவர்களால் முன்வைக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- மனித வளங்களை உழைப்பு பகிர்வுக்கேற்ப பிரித்து பங்களிக்க முடியும்.

B- வீட்டுத் தோட்டத்தை அலங்காரம் செய்வதற்கு உதவுவது பௌதிகம் அல்லாத வளமாகும்.

C- ஏதாவது வேலையைச் செய்யும்போது மனித வளங்களில் பௌதிக வளங்கள் உதவும்

D- காலமும் நேரமும் பௌதிக வளங்களாகும்

இவற்றுள் சரியான விடைகளாக அமைவன,

1. A யும் B யும்
2. B யும் C யும்
3. C யும் D யும்
4. A யும் C யும்

40) வரையறுக்கப்பட்ட இடவசதி கொண்ட மனையில் பயன்படுத்தக்கூடிய பல் தொழிற்பாட்டு தளபாடங்களைக் கொண்ட தொகுதி

1. இலாச்சியுடன் கூடிய கட்டில், கண்ணாடி மேசை, திவான்
2. இலாச்சியுடனான கட்டில், மடிக்கும் கட்டில், சுவர் அலுமாரி, தட்டுர் கட்டில்
3. இலாச்சியுடனான கட்டில், தட்டுக் கட்டில், மடிக்கும் மேசை, திவான்
4. இலாச்சியுடனான கட்டில், சுவர் அலுமாரி, கண்ணாடி மேசை, தட்டுக்கட்டில்

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: மனைப்பொருளியல் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I | කාලය / காலம் / Time: மணி2 |

**முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களை த்தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக**

01. பின்வரும் நிகழ்வை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக

கவீனா தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவியாவார். இவளின் மனைப் பொருளியல் பாடத்தில் தையலுக்கு தேவையான துணியை வாங்க வேண்டி உள்ளது. அதற்காக வாரநாட்களில் வீட்டுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நகரத்திற்கு செல்லும் தாயுடன் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார். தந்தையும் தாயும் நிரந்தர தொழில் ப புரிபவர்கள். தந்தையார் புதிதாக நிருமாணிக்கும் வீட்டைப்பற்றி கூடிய கவனம் செலுத்துவார். முன்பிள்ளைப் பருவ வயதுடைய கவினாவின் தங்கை பகல் வேளையில் அவர்களது பாட்டியை பராமரிப்பில் கவனம் செலுத்துவர்

i) சந்தையில் கொள்வனவு செய்யக்கூடிய சுவையும் மணமும் கொண்ட மரக்கறிகள் நான்கைப் பெயரிடுக.

ii). வேலைக்கு எடுத்து செல்லக்கூடிய பகல் வேளை உணவில் காணக்கூடிய அம்சங்கள் இரண்டைப் பெயரிடுக.

iii) சுவினாவின் பருவத்துக்குரிய போசணைத் தேவைகள் இரண்டை எழுதுக.

iv) வயதான தாயாருக்கு கல்சிய குறைபாடு காரணமாக ஏற்படும் நோய் நிலைமையைப் பெயரிடுக.

v) தையலுக்காக தெரிவு செய்யும் துணியில் இருக்க வேண்டிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக

vi) துணியணிகளை நிர்மாணிப்பதற்கு தேவையான கருவிகள், பொருட்கள் இவ்விரண்டைப் பெயரிடுக.

vii) கவினாவின் சமூக மேம்பாட்டிற்காக பாடசாலையில் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் நான்கினைப் பெயரிடுக

viii) கட்டிளமைப் பருவத்தில் இனப்பெருக்க சுகாதார நிலைமைகளை பேணாதவிடத்து ஏற்படும் அல்லது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நான்கினைப் பெயரிடுக

ix) சுறுசுறுப்பான காலைவேளையில் கவிதாவின் குடும்பத்தினரால் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக

x) பாட்டி மனையில் இருப்பதனால் குடும்பத்திற்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு பெயரிடுக.

02.

i) குழந்தை ஆடையொன்றுக்கான துணி தெரிவின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்றைப் பெயரிடுக.

ii) முன்பிள்ளைச் சட்டைக்கான உடற் பகுதியின் மாதிரியுருவைத் தயாரிப்பதற்குத் தேவையான முக்கியமான அளவுகளைத் தருக.

iii) குழந்தை ஆடையை அலங்கரிப்பதற்காக காட்டுருஒன்றை வரைந்து அதை பூரணப்படுத்துவதற்கு தேவையான அலங்கார தையல்கள் நான்கை பெயரிடுக.

03.

i) உடலினுள் உயிர்சத்து A யின் மூலம் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் மூன்றைப் பெயரிடுக.

ii) நிரம்பிய கொழுப்பு அமிலங் நிரம்பா கொழுப்பமிலங்கள் மூன்று வீதம் பெயரிடுக.

iii) இலங்கையில் காணப்படும் பிரதான போசணைக் குறைபாட்டு நோய் குருதிச்சோகை ஆகும். இந்நோயின் அறிகுறிகள் நான்கு தருக.

04.

i). உணவு பேணலில் உணவு பழுதடைவதைத் தவிர்ப்பதற்காகக் கையாளும் நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் நோக்கங்கள் மூன்றைப் பெயரிடுக.

ii). உணவுப் பொருட்களில் தரமான சேர்க்கைகளை சேர்க்காதவிடத்து ஏற்படும் நிலைமைகள் மூன்று தருக

iii) உலர் வெப்ப சமையல் முறைகள் நான்கைப் பெயரிட்டு அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக

05.

i) வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்றைத் தருக.

ii) உமது வீட்டையும் வீட்டுத்தோட்டத்தையும் சுத்தம் செய்யும்போது குடும்ப அங்கத்தவர்களின் உழைப்பு பகிர்வு முகாமைத்துவ செயன்முறையை அட்டவணைப்படுத்துக

iii) உமது படுக்கை அறையை 'தனி நிற இசைவு' மூலம் அலங்காரம் செய்யும் முறையை உதாரணம் மூலம் தருக.

06.

i) தெறிவினைச் செயல்பாடு என்பதை தெளிவுபடுத்தி அதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

ii) கர்ப்பவதித் தாய் ஒருவரைப் பராமரிக்கும் போது விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மூன்று தருக

iii) தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம் குழந்தைக்கும் தாய்க்கும் கிடைக்கக்கூடிய நன்மைகள் இவ்விரண்டு தருக

07.

i). ஆண் பெண் இனப்பெருக்கம ஓமோன்களை பெயரிட்டு இவ் ஓமோன்களை சுரக்கும் சுரப்பியின் பெயரைத் தருக.

ii) குழந்தை ஒன்றிற்கான மேலதிக உணவை வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்று தருக

iii). ஜப்பானீஸ் என் சைபலயிடிஸ் ஆஆசு வக்சீன் முதலாவது தடவை ஆகிய நீர் பீடனங்கள் வழங்கப்படும் வயதையும் அவற்றால் தடுக்கப்படும் நோய்களையும் குறிப்பிடுக

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

පිළිතුරු පත්‍රය
Marking Scheme

ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂය / பாடம் / Subject: மனைப்பொருளியல் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II

.

விடைகள்
பகுதி 1

| வினா எண் | விடை | வினா எண் | விடை | வினா எண் | விடை | வீனா எண் | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 11 | 2 | 21 | 2 | 31 | 2 |
| 2 | 2 | 12 | 3 | 22 | 3 | 32 | 4 |
| 3 | 3 | 13 | 4 | 23 | 3 | 33 | 3 |
| 4 | 1 | 14 | 2 | 24 | 3 | 34 | 2 |
| 5 | 2 | 15 | 4 | 25 | 2 | 35 | 1 |
| 6 | 2 | 16 | 1 | 26 | 3 | 36 | 4 |
| 7 | 3 | 17 | 3 | 27 | 1 | 37 | 3 |
| 8 | 4 | 18 | 4 | 28 | 3 | 38 | 4 |
| 9 | 1 | 19 | 3 | 29 | 2 | 39 | 4 |
| 10 | 4 | 20 | 1 | 30 | 3 | 40 | 1 |

(01 புள்ளி X 40 = 40 புள்ளிகள)

பகுதி-11
விடைகள்

01)

(1) லிக்ஸ் கோவா நுக்கோல் முள்ளங்கி கறிமிளகாய் (4விடயத்திற்கு 2புள்ளி)

(2) விரைவாக பழுதடையாத புளிக்காத உணவுகளைச் சேர்த்தல்
நீர்த்தன்மையான உணவுகளைச் சேர்ப்பதை தவிர்த்தல்
பச்சையாக உண்ணக்கூடிய உணவுகளை தவிர்த்தல்
முள்ளங்கி போன்ற மணமுள்ள உணவுகளை தவிர்த்தல்
பதப்படுத்தப்பட்ட உணவுகளை சேர்ப்பதை தவிர்த்தல்
எண்ணையைப் பயன்படுத்தி சமைக்கும் உணவுகளை சேர்த்தல்
( 2விடயத்திற்கு 2புள்ளி)

(3)புரதம் -உடல் வளர்ச்சிக்கு
சக்தி –செயற்பாட்டுத்திறனுக்கு
கல்சியம் -எலும்பு வளர்ச்சிக்கும் எலும்பின் உறுதியை அதிகர்ப்பதற்கும்
இரும்பு –குருதி உற்பத்திக்கு
நாகம் -பாலியல் முதிர்ச்சிக்கு
உயிர்சத்து பி தொகுதி –செயற்பாட்டுத்திறன் அதிகரிப்பதற்கு
(விடயத்திற்கு 2புள்ளி)

(4)ஒஸ்டியோபொரோஸிஸ் (என்பு பலவீனமடைதல்) (2புள்ளி)

(5)பருத்திநாரினால் தயார்க்கப்பட்ட பொப்பிளின் துணிவகை
இள நிறமானதான துணி
மிருதுவானதும் மென்மையானதும்
(2விடயத்திற்கு 2புள்ளி)

(6)கருவிகள்
அளவுநாடா கத்தரிக்கோல் சுவடுவரைசில்லு தீதாள்
குண்டூசி தையல் ஊசி பென்சில் அடிமட்டம்
பொருட்கள்
துணி துணிக்காபன் பலவர்ண நூல் ரிபன் (2புள்ளி)

(7) குழுநடவடிக்கைகளில் ஈடுபடுதல்
மாணவத்தலைவி பாடங்களுக்கான தலைவி வகுப்புத்தலைவி பதவிகளைவழங்குதல்
(2புள்ளி)

(8) கல்வி நடவடிக்கைகள் சீர்குழையும்
சமூக அவமானத்திற்கு உட்படுவர
வீட்டிலும் தனது சூழலிலும் பிரச்சனைகள் ஏற்படல்
எதிர்கால வாழ்கை பாழடையும்
(2புள்ளி)

(9) முதல்நாள் இரவுவேளையில் மறுநாளுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல்
பதப்படுத்ததப்பட்ட உணவுகளை(பேணப்பட்ட) பயன்படுத்தல்
வேலைகளை உழைப்புபகிர்வின் மூலம் பகிர்ந்துகொள்ளல்
புத்தகங்களையும் உடைகளையும் ஆயத்தபடுத்திவைத்தல்
வேலைகளை இலகுவாக்குவதற்கு மின்உபகரணங்களையும் தொழிற்சிக்கன உபகரணங்களையும் பயன்படுத்துதல்
(2புள்ளி)

(10)குழந்தைகளிடையே நல்ல ஒழுக்கங்களை வளர்த்துக்கொள்வதற்கு
பழங்கால கதைகள் கவிதைகள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு
பாதுகாப்பிற்கும் சிறந்த கவனிப்பிற்கும்
நற்பழக்க வழக்கங்களை பழகுவதற்கும்
சமூக வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும்
(2புள்ளி)
(மொத்தப் புள்ளிகள் 20)

(02)
(1)மிருதுவானது மென்னையானது
இளநிறமான பருத்திதுணிவகையான துணியைத்தெரிவுசெய்தல்
சிறிய காட்டுருக்கள் கொண்டதுணி
சலவைக்கு ஏற்றதுணி உயர்வெப்பத்தை தாங்கக்கூடியதுமானது

கூடிய உறிஞ்சும் தன்மை உடையதுமானது

(3விடயத்திற்கு 3புள்ளிகள்)

(2)மார்புச்சுற்றளவு இடைச்சுற்றளவு தோளில் இருந்து இடைவரையான உயரம் முதலாம் குறுக்களவு இரண்டாம் குறுக்களவு தோள் அகலம்

(6விடயத்திற்கு 3புள்ளிகள்)

(3)காட்டுருவிற்கு (2புள்ளிகள்)

அலங்காரத்தையல்களுக்கு

கம்பளி நரம்பு வெட்டுக்குத்து சங்கிலி நீள்குறுக்குத்தையல் அடுக்குநாணயவுருத்தையல் பிரான்சிய முடிச்சு அழுத்ததையல் மீன்முள்ளுத்தையல்

(காட்டுருவில் தையலின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின் 2புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 10)

(03)

(1)கண்களின் சிறந்தநிலைப்பாட்டிற்கும் இனப்பெருக்கச்செயற்பாட்டிற்கும் தோளின் ஆரோக்கியத்திற்கும் சீதமென்சவ்வின் சிறந்தநிலைப்பாட்டிற்கும் ஓட்சியேற்ற எதிரியாக தொழிற்படுவதற்கும் தலைமுடியை சிறந்தமுறையில் பேணுவதற்கும்

(3விடயத்திற்கு 3புள்ளிகள்)

(2)நிரம்பிய கொழுப்பமிலம்

மிஸ்டிக் அமிலம் பாமிற்றிக்அமிலம் ஸ்திரிக்அமிலம் கப்ரிலிக்அமிலம் லோரிக்அமிலம் பியூத்திரிக்அமிலம்

(3விடயத்திற்கு 2புள்ளி)

நிரம்பாக் கொழுப்பமிலம்

ஒலேயிக்அமிலம் லினோலெயிக்அமிலம் லினோலெயிக் அமிலம் அரக்கிடோனிக்அமிலம்

(3விடயத்திற்கு 2புள்ளி)

(3)விரைவில் களைப்படைதல் செயற்திறன் குறைதல் இதயத்துடிப்புவீதம் குறைதல் கவனக்குறைவு ஞாபகசக்திகுறைதல் திணிவுகுறைவான குழந்தைகள் பிறத்தல் இலகுவில்நோய்களுக்கு ஆளாதல் உடல்வெளிறுதல் கண்கள் வெளிறம்தன்மை ஏற்படல்

(4புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 10)

(04)

(1)நுட்பமுறைகளை பயன்படுத்தும் நோக்கங்கள்

நுண்ணுயிர்களை அழித்தல்
நுண்ணுயிர்களினதும் நொதியங்களினதும்தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்தல்
நுண்ணுயிர்களதும் நொதியங்களினதும் தொழிற்பாட்டைக் அழித்தல்

(3புள்ளிகள்)

(2)உணவின் நிறம்மாற்றமடைதல் உணவுக்கே உரிய சுவை வேறுபடும் உணவிற்கே உரியமணம் வேறுபடும் உணவு நச்சுதன்மை அடையும்

(3விடயத்திற்கு3புள்ளிகள்)

(3)உலர்வெப்ப சமையல் முறைகள்

நெருப்புத்தணலின் கீழ் சுடுதல்-கத்தரிக்காய் பலாக்கொட்டை
நெருப்புச்சுவாலையில் சமைத்தல்-இறைச்சி கருவாடு மீன்
தட்டில் அல்லது சட்டியில் சுடுதல்-ரொட்டி தோசை கோப்பி
கனலடுப்பில் சுடுதல்- கேக் பிஸ்கட் பாண் பணிஸ் பேஸ்ரி
டோஸட் செய்தல்- பாண்
க்ரில் செய்தல்-இறைச்சி மீன் தக்காளி மரக்கறி காளான்
ரோஸ்ட் செய்தல்-மீன் இறைச்சி கிழங்குவகை

(பெயரிடல் உதாரணம்கூறல் 01 வீதம் 4புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 10)

(05)

(1)வரவுசெலவு திட்டம் அமைப்பதன் நன்மைகள்

பல்வேறு செலவினங்களுக்காக ஒதுக்கவேண்டிய தொகை தொடர்பாக அறிய கூடியதாய் இருத்தல்
அத்தியாவசிய செலவுகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடியதாய் இருத்தல்
மாதாந்தம் குடும்பத்திற்கு கிடைக்கும் வருமானத்தை அறியக்கூடியதாய் இருத்தல்
வருமானத்திற்கேற்ப செலவுசெய்வதற்கான வழிகாட்டப்படல்
அனாவசிய செலவுகளைத் தவிர்த்தல்
சிறிய அளவில் சேமிப்பைத் துண்டுதல்

(3புள்ளிகள்)

(2)உழைப்பு பகிர்வு முகாமைத்துவ செயன்முறை அட்டவணை

| திட்டமிடல் | ஒழுங்கமைத்தல் | செயற்படுத்தல் | மதிப்பிடல் |
|---|---|---|---|
| **மனை-பணிகளை ஒழுங்கமைத்தல்**<br>1.துர்சுதட்டுதல்<br>2.படங்களைத் துடைத்தல்<br>3திரைச்சீலை கட்டில் விரிப்பு கால்துடைப் பம் போன்றவற்றை கழுவுதல் | திறமைக்கு ஏற்ப வேலைகளை பகிர்ந்தளித்தல்<br>சகோதரர்களுக்கு மகள்<br>தாய் மகள் | 1 கொடுக்கப்பட்ட வேலைகளை சரியாகச் செய்தல்<br>2ஏனையோருக்கு ஒத்துழைப்பு வழங்குதல்<br>3குறிப்பிட்ட நேரத்திற்று வேலைகளை முடித்தல்<br>4மீள ஒழுங்கமைத்தல் | 1 செய்த வேலைகளில் திருப்தி அடைதல்<br>2பாராட்டுதல்<br>3குறைகளை கண்டறிதல்<br>4திருத்திக்கொள்ளல்<br>5குடும்பத்தினர் அனைவரும் ஒற்றுமை ஒத்துழைப்பு மூலம் மனத் திருப்தி அடைதல் |
| 4தேவையற்ற பொரு டுகளை அகற்றுதல் | மகன் தந்தை | | |
| 5கூட்டுதல் துடைத்தல் | மகன் தந்தை | | |
| 6மீண்டும் உரிய இடத்தில் பொருட்களை ஒழுங்கமைத்தல் | தாய் மகள் | | |
| **வீட்டுத் தோட்டம்** | | | |
| 1 உயரமான மரங்கள் வேலி போன்றவற்றை வெட்டி ஒழுங்கமைத்தல் | மகன் தந்தை | | |
| 2 இலைகளை அகற்றுதல் | மகன் மகள் | | |
| 3 பூச்சாடிகளுக்கு பசளையிடல் | தாய் மகள் | | |
| 4 இலை குலைகளை ஒன்று சேர்த்து கொம்பஸ் உரம் தயாரித்தல் | தந்தை மகன் | | |
| 5 பூப் பாத்திகளை | தாய் மகள் | | |

| | | | |
|---|---|---|---|
| ஒழுங்கமைத்தல்<br>6 நீர் ஊற்றுதல்<br>7 உபகரணங்களை சுத்தம் செய்து உரிய இடத்தில் வைத்தல் | மகள்<br><br>தந்தை தாய் | | |

(3புள்ளிகள்)

(3)படுக்கையறையின் தனிநிற இசைவு

கூறை -வெள்ளை

சுவர் -இளம்பச்சை

புாவு - பச்சை நிறங்கொண்ட தரை ஒடுகள்

திரைச்சீலைகள் -சிவப்புப் பூக்கள் கொண்ட பச்சைநிற லேஸ்துணி

தளபாடங்கள் -கபில நிறம்

பச்சை நிறமானது வெள்ளை கறுப்பு நிறங்களைச் சேர்ப்பதன் மூலம் இளம் கடும் நிறங்களைப் பெற்றுக்கொள்ளளாம் திரைச்சீலைகள் சிவப்புப்பூக்களைக் கொண்டுள்ளன ஆனால் பச்சை வர்ணம் முதன்மைவர்ணத்துடன் பொருத்தப்பாடுடையதாகின்றுத

(4புள்ளிகள்)

(மொத்தபுள்ளிகள் 10)

(06)

(1)தெறிவினைச் செயற்பாடு

சுற்றுச் சூழலிலுள்ள உணர்வுகளுக்கு மூளையின் கட்டுப்பாடு இன்றி சிசு காட்டும வெளிப்பாடுகள் எளிய தெறிவினைச் செயற்பாடுகளாகும்

உதாரணம்----- அழுதல் பாலை உறிஞ்சிக் குடித்தல் திடுக்கிடுதல் ஈர்த்தல்

(3புள்ளிகள்)

(2) கர்ப்பிணிப் பருவத்தில் ஏற்படக்கூடிய சிறுகோளாறுகள்

ஆபத்தான காரணிகள்

கர்ப்பிணித் தாயின் ஆரோக்கியமும் நாளாந்த நடவடிக்கைகளும்

(3புள்ளிகள்)

(3) தாய்ப்பாலுட்டலின் மூலம்

தாய்க்கு

தாயின் கருப்பை மீண்டும் பழைய நிலைக்கு மீளுதல்

இயற்கையான கர்ப்பத்தடைக்கு எவ்வித பாதகமான நிலைமையும் ஏற்படாது

தாய்க்கு மார்புபுற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைதல்

தாய் சேய் உறவு அதிகரிக்கும்

சேய்க்கு

ஆத்தியாவசியமான கொழுப்பமிலம்˙காணப்படுவதால் மூளைவளர்ச்சி முக்கியமானதாகும்

புாலை உறிஞ்சிக் குடிப்பதால் மொழி விருத்திக்கு இலகுவாகும்

சமிபாடு இலகுவாகும்

அனைத்துப் போசணைகளும் கிடைக்கும்

இயற்கையான நோய்எதிர்ப்புச் சக்தி கிடைக்கும்
தாய் நேய் உறவு அதிகரிக்கும்

(4புள்ளிகள்)
(மொத்தபுள்ளிகள் 10)

(07)

(1)இனப்பெருக்க ஓமோன்கள்

ஆண் தெஸ்தெஸ்தரோன்
பெண் ஈஸ்ட்ரஜன்
இனப்பெருக்க உறுப்புக்களுடன் தொடர்புடைய ஓமோன் பிட்டீயூட்டரி

(3புள்ளிகள்)

(2)மேலதிக உணவை வழங்கும் போது

சிறிதளவாக ஆரம்பித்து படிப்படியாக அதிகரித்தல்
ஒரு தடவைக்கு ஒரு புதிய உணவு வீதம் அறிமுகம் செய்தல்
உணவின் அளவையும் போசணையையும் படிப்படியாக அதிகரித்தல்
உப்பு சீனி சேர்ப்பதை தவிர்த்தல்
பல்வேறு வகையான உணவுவகைகளைக் கொடுத்தல்
ஆறு மாதம் முடிந்ததும் மேலதிக உணவை வழங்குதல்

(3புள்ளிகள்)

(3)

| **தடுப்பூசி** | **நோய்** | **காலம்** |
|---|---|---|
| யப்பானீஸ்என்சைபலயிடிஸ் | யப்பான் மூளைக்காச்சல் | 9மாத முடிவில் |
| வக்சீன் 1வதுதடவை | சின்னமுத்து ஜேர்மன்<br>சின்னமுத்து(ருபெல்லா)<br>கூகைகட்டு | 12மாத முடிவில் |

(4புள்ளிகள்)
(மொத்தபுள்ளிகள் 10)

.

**අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට**

**www.lol.lk**
**Learn Ordinary Level**

LOL.lk online Book Store

**අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371**














































Online shopping

**www.lol.lk**
**Learn Ordinary Level**

DELIVERY ISLANDWIDE | SECURE PAYMENT

# LOL.lk
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්




## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්




## කෙටි සටහන් පොත්




වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

ප්‍රශ්නපත්‍ර පොත්

ගෙදරටම ගෙන්ව ගන්න

ඔන්ලයින් ඕඩර් කරන්න

WWW.LOL.LK

වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal

NO PAYPAL ACCOUNT NEEDED!

ONLINE
BOOK STORE

An evening of fun for young readers

